



# செம்பவாங் மரபுடைமைப் பாதை

செம்பவாங் மரபுடைமைப் பாதை, சிங்கப்பூரிலுள்ள இடங்களின் வரலாற்று, சமூக நினைவலைகளை ஆவணப்படுத்தி படைக்கும் நோக்கத்துடன் தேசிய மரபுடைமைக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இவ்வட்டாரத்தில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள், அல்லது விளையாடியவர்களுக்கு இனிமையான அக்கால நினைவுகளை இப்பாதை ஞாபகப்படுத்தும் என்றும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயன்மிக்கத் தகவல் வளமாகப் பயன்படும் என்றும் நம்புகிறோம்.

ஆதரவாளர்கள்:

National Heritage Board

MCCY Ministry of Culture, Community and Youth



கடற்படை அதிகாரிகள் பியூலியூ அணைகரையில் ஹெச்எம்எஸ் அல்பியோன் விமானந்தாங்கி கப்பலுக்குத் தலைவணங்குகின்றனர், 1965
கிளைவ் மெனரிக்கு நன்றி

# பரிந்துரைக்கப்படும் குறுந்தூரப் பயணப்பாதைகள்

கண்ணைக் கவரும் கடற்கரை, காலனித்துவ காலத்து வீடுகள் போன்ற இயற்கையான, கட்டடக்கலை நினைவுச்சின்னங்கள் இடம்பெறும் இம்மூன்று பயணப்பாதைகளும், செம்பவாங்கின் செழிப்பான கடற்படை வரலாற்றையும், அங்கு வாழ்ந்த சமூகங்களின் பன்மயமான மரபுடைமையும் எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பொருத்தமான ஒரு பயணப்பாதையைத் தேர்ந்தெடுத்து, செம்பவாங்கின் மரபுடைமையை இன்றே ஆராய்ந்திடுங்கள்!

**தயவுசெய்து கவனத்தில் கொள்க!**
இப்பகுதியில் உள்ள வீடுகள் தனியாருக்குச் சொந்தமானவை. தயவுசெய்து குடியிருப்பாளர்களை மதித்து, சத்தத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். வீடுகளுக்குள் அல்லது வளாகத்திற்குள் நுழையாதீர்கள். **தயவுசெய்து வீடுகளைப் புகைப்படமும் காணொளியும் எடுக்காதீர்கள்.**

## செம்பவாங்கின் வரலாற்று நினைவுச்சின்னங்கள்

### பொதுப் போக்குவரத்துடன் 2 மணிநேரம் (7 கிலோமீட்டர்)

செம்பவாங்கில் பிரிட்டிஷாரும் உள்ளூர் சமூகங்களும் அமைத்த பல வரலாற்று நினைவுச்சின்னங்கள் உள்ளன. அதோடு, சிங்கப்பூரின் பெருநிலத்தில் உள்ள ஒரே இயற்கையான வெந்நீர் ஊற்றும் இங்குதான் உள்ளது. இந்தப் பாதை, செம்பவாங்கின் முக்கியமான கடந்தகால மைல்கற்களை நினைவுபடுத்தும் மேற்குறிப்பிட்ட இடங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தும்.




உங்கள் பயணத்தை **புனித மரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவிலில்** தொடங்குங்கள். இக்கோவில், கேன்பரா பெருவிரைவு ரயில் நிலையத்தின் எதிர்ப்பக்கத்தில் அமைந்துள்ளது. இந்துக் கடவுள் முருகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இக்கோவில், முதன்முதலில் 1962ல் அமைக்கப்பட்டது. முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தில் பணிபுரிந்த இந்து சமயத்தைச் சேர்ந்த கப்பல்பட்டறை ஊழியர்கள், கேன்பரா சாலைக்கு அருகில் ஒரு மரத்தின்கீழ் சிறிய சந்நிதியை அமைத்தனர். இக்கோவில் 1996ல் இன்றைய இடத்திற்கு மாறியது. ஆண்டுதோறும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் பங்குனி உத்திரத் தேர் ஊர்வலம் இக்கோவிலில் சிறப்பாக நடைபெறும்.



அடுத்த நிறுத்தத்தை அடைய, நீங்கள் கேன்பரா லிங்க் வழியாக நடந்து சென்று, செம்பவாங் சாலையில் வலதுபக்கம் திரும்பலாம், அல்லது கேன்பரா பெருவிரைவு ரயில் நிலையத்திலிருந்து பேருந்தில் ஏறி, டர்பன் சாலைக்குப் பிறகு இறங்கி, செம்பவாங் சாலையின் குறுக்கே கடந்து, கடைவீடுகளின் வரிசையை நோக்கிச் செல்லலாம்.

**செம்பவாங் ஸ்ட்ரிப்** எனப் பிரபலமாக அறியப்பட்ட இந்தக் கடைவீடுகளில், ஓஷன் பார், மெல்பர்ன் பார் போன்ற மதுபானக் கடைகள் ஒருகாலத்தில் இருந்தன. கடற்படைத் தளத்திற்கு வருகைதரும் கடலோடிகள் அந்தக் கடைகளுக்கு அடிக்கடி செல்வது வழக்கம். கடைகளுக்குப் பக்கத்தில் செம்பவாங் பேட்டியோ என்றழைக்கப்பட்ட பிரபலமான வெளிப்புற உணவகமும் அமைந்திருந்தது. அந்த உணவகம் 1980களில் இடிக்கப்பட்டுவிட்டது. இன்று, செம்பவாங் ஸ்ட்ரிப்பில் கடைகளும் பிரபலமான உணவகங்களும் இருக்கின்றன. உங்கள் பயணத்தைத் தொடருமுன் நீங்கள் குளிர்பானம் பருகி ஓய்வெடுக்கலாம்.



இந்தக் கடைவீடுகளிலிருந்து, அட்மிரால்டி சாலை ஈஸ்ட்டுக்குச் செல்லுங்கள். அங்கு, சாலையின் இருமருங்கிலும் காலனித்துவக் காலத்து வீடுகள் பலவற்றைக் காண்பீர்கள். அவை முன்பு பிரிட்டிஷ் பணியாளர்களுக்கான **கடற்படைத் தள வீடுகளாக** இருந்தன. பெரிய கறுப்பு, வெள்ளை வீடுகள், கப்பல்பட்டறையின் மூத்த பணியாளர்களுக்காகக் கட்டப்பட்டவை. மேற்பார்வையாளர்கள் போன்றவர்கள் சிறிய வீடுகளில் தங்கியிருந்தனர்.

இங்கிருந்து கேன்பரா சாலை சந்திப்பு வரை தொடர்ந்து சென்றால், கடற்படைத் தளத்தின் முன்னாள் கப்பல்பட்டறையின் (இன்றைய செம்ப்கார்ப் மரீன் அட்மிரால்டி பட்டறை) பிரதான நுழைவாயிலைக் காண்பீர்கள். 1938ல் திறக்கப்பட்ட இந்தப் பட்டறையில்தான், 1968 வரை பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் பழுதுபார்க்கப்பட்டன. அதன்பிறகு, கப்பல்பட்டறை சிங்கப்பூர் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு, **செம்பவாங் கப்பல்பட்டறையாக** மாறியது.

அடுத்து, கென்பரா சாலையில் தொடர்ந்து சென்று, செம்பவாங் சாலைக்குச் செல்லும் பேருந்தில் ஏறுங்கள். நீங்கள் **செம்பவாங் கடைத்தொகுதியைக்** கடந்து செல்வீர்கள். இந்தக் கடைத்தொகுதி, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ரப்பர் மரத் தோட்டங்கள் நிறைந்திருந்த பகுதியில் கட்டப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ரப்பர் தோட்டங்கள் வீடுகளாகவும் கடைகளாகவும் மாறின. 1986ல் திறக்கப்பட்ட செம்பவாங் கடைத்தொகுதியே, இவ்வட்டாரத்தின் முதல் நவீன கடைத்தொகுதியாகும். நீங்கள் இங்கே நிறுத்தி ஓய்வெடுக்கலாம், அல்லது பயணப்பாதையிலிருக்க இரண்டு நிறுத்தங்கள் தள்ளி இறங்கலாம் (யீஷூன் அவென்யூ 7க்குப் பிறகு).



யீஷூன் அவென்யூ 7க்குப் பிறகுள்ள பேருந்து நிறுத்தத்தில் இருந்து, செம்பவாங் சாலையின் குறுக்கே கடந்து சென்று, கம்பாஸ் அவென்யூ வழியாகச் சென்றால் **செம்பவாங் வெந்நீர் ஊற்றுப் பூங்காவை** அடையலாம். இதுதான் இந்தப் பயணப்பாதையின் கடைசி நிறுத்தம். இயற்கையான இந்த வெந்நீர் ஊற்று, 1900களின் துவக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. சிங்கப்பூர் முழுவதிலுமிருந்து ஏராளமான வருகையாளர்களை இந்த ஊற்று இன்றுவரை ஈர்க்கிறது. பயணப்பாதை இங்கு முடிவடைந்தாலும், நீங்கள் பூங்காவைச் சுற்றிப்பார்த்து, வெந்நீர் ஊற்றில் பாதங்களை நனைத்து, பூங்காவிலுள்ள தேநீரகத்தில் சிற்றுண்டியும் வாங்கி உண்ணலாம்.



## செம்பவாங்கின் சமூகங்கள்

### பொதுப் போக்குவரத்துடன் 3 மணிநேரம் (8 கிலோமீட்டர்)

செம்பவாங் 19ஆம் நூற்றாண்டிலிருந்து பல சமூகங்களின் இல்லமாகத் திகழ்ந்து வருகிறது. கடலோர கிராமவாசிகள் முதல் முன்னாள் கடற்படைத் தளத்திலிருந்த பிரிட்டிஷ் குடும்பங்கள் வரை அதில் உள்ளடங்கும். இந்தப் பாதை, அந்த முன்னாள் அக்கம்பக்கங்கள் வழியாக உங்களை அழைத்துச்சென்று, வடக்கு வட்டாரச் சமூகங்களிடையில் அமைந்திருந்த கட்டடங்களை உங்களைச் சுட்டிக்காட்டும்.



உங்கள் பயணத்தை **முன்னாள் அட்மிரால்டி ஹவுஸில்** தொடங்குங்கள். 1939-40 வாக்கில் கட்டப்பட்ட இந்த வீடு, நேர்த்தியான கைவினைக்கலை கட்டட பாணியில் வடிவமைக்கப்பட்டது. முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தின் ஆக மூத்த அதிகாரியின் இருப்பிடமாக இது பயன்பட்டது. இந்த வீடு குன்றின்மீது அமைந்திருப்பதால், அங்கிருந்து சுற்றுவட்டாரக் கடற்படைத் தளத்தையும் அருகிலுள்ள கடலோரப் பகுதியையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

அடுத்து, கேன்பரா சாலையில் (புளோக் 351) பேருந்தில் ஏறி, டர்பன் சாலைக்குப் பிறகு செம்பவாங் சாலையில் இறங்குங்கள். அதன்பிறகு, அட்மிரால்டி சாலை ஈஸ்ட்டின் குறுக்கே தாண்டிச்சென்று, குயீன்ஸ் அவென்யூ-வுக்குள் திரும்புங்கள். அங்கு, பிரிட்டிஷ் பணியாளர்களுக்காக 1930களில் **கடற்படைத் தளத்தில்** கட்டப்பட்ட ஏராளமான கறுப்பு, வெள்ளை **வீடுகளைக்** காண்பீர்கள். இப்பகுதியில் உள்ள வீடுகள் இன்று தனியாருக்குச் சொந்தமானவை. நீங்கள் வீடுகளின் கட்டடக்கலையையும் வளாகத்தையும் பார்த்து ரசிக்கலாம். ஆனால், உள்ளே நுழையவோ, புகைப்படம் எடுக்கவோ கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

குயின்ஸ் அவென்யூவில் இருந்து, செயின்ட் ஹெலனா சாலைக்குள் திரும்பி **ஜிப்ரால்டர் கிரசன்ட்டை** அடையலாம். முன்னாள் கடற்படைத் தளத்தின் ஆகப் பழமையான கறுப்பு, வெள்ளை பங்களாக்கள் இந்தச் சாலையில் உள்ளன. அவை 1929 வாக்கில் கட்டப்பட்டவை. குயீன்ஸ் அவென்யூவில் இருந்த பங்களாக்களைப் போலல்லாமல், இந்த வீடுகள் இரண்டு அல்லது மூன்று பேர் பகிர்ந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தனித்துவமிக்கக் கட்டடங்களில் ஒன்று ஜப்பானிய தியேட்டர் (318-2 ஜிப்ரால்டர் கிரசன்ட்). இந்தக் கட்டடத்தைப் போர்க்கைதிகள் கட்டியதாக நம்பப்படுகிறது. பிரிட்டிஷாரின் நாடக அரங்கேற்றங்களுக்கு இந்தக் கட்டடம் பயன்பட்டது.



ஜிப்ரால்டர் கிரசன்ட்டின் முடிவில், செம்பவாங் சாலை நோக்கிச் சென்று (துவா சாலை வழியாக), **ஆன்ட்ரூஸ் அவென்யூ**-வுக்குத் தாண்டிச் செல்லுங்கள். புக்கிட் செம்பவாங் ரப்பர் கம்பெனியின் மேலாளர் தாமஸ் எட்வர்ட் ஆன்ட்ரூஸ் நினைவாக இந்தச் சாலைக்கு அவரது பெயர் சூட்டப்பட்டது. அவர் பணிபுரிந்த ரப்பர் கம்பெனி, இவ்வட்டாரத்தில் பல ரப்பர் மரத் தோட்டங்களின் உரிமையாளராக இருந்தது. போருக்குப் பிறகு புக்கிட் செம்பவாங் தனது தோட்டங்களை மறுமேம்பாடு செய்து குடியிருப்பு பேட்டைகளாக மாற்றியது. ஆன்ட்ரூஸ் அவென்யூவுக்கு அப்பாலிருக்கும் செம்பவாங் ஸ்ட்ரெய்ட்ஸ் எஸ்டேட் இதற்கு ஓர் உதாரணம்.

ஆன்ட்ரூஸ் அவென்யூ வழியாக நடந்து சென்று ஜாலான் மெம்புரொங்கை அடையலாம். அங்கிருந்து **மஸ்ஜித் பெடம்படன் மலாயு செம்பவாங்** பள்ளிவாசலுக்குச் செல்லலாம். சிங்கப்பூரின் வடக்குக் கரையில் இன்றுவரை நீடித்து நிலைக்கும் கடைசி கம்போங் பள்ளிவாசல் இது. முன்னாள் கம்போங் தெங்காவில் வாழ்ந்துவந்த கிராமவாசிகள், 1962-63 வாக்கில் இந்தப் பள்ளிவாசலைக் கட்டினார்கள். அருகிலிருந்த கம்போங் வாக் ஹசான், கம்போங் தஞ்சோங் இராவ் போன்ற மற்ற கிராமங்களிலிருந்த முஸ்லிம் மக்களும் இந்தப் பள்ளிவாசலைப் பயன்படுத்தினார்கள்.

ஜாலான் மெம்புரொங் வழியாகத் தொடர்ந்து சென்றால், சிம்பாங் கிரி பூங்கா இணைப்பை அடைவீர்கள். அங்கு **பேஷன் வேவ் @ செம்பவாங்கை** காண்பீர்கள். இந்தக் கடல் விளையாட்டு நிலையம், 1961ல் கம்போங் தெங்கா விடுமுறை முகாமாகத் திறக்கப்பட்டது. இளையர்களும் சமூகக் குழுக்களும் நாடிச்சென்ற பிரபலமான முகாமாக அது இருந்தது.



செம்பவாங் சாலை நெடுகில் அமைந்திருக்கும் கடைவீடுகளே பாதையின் இறுதி நிறுத்தம். நீங்கள் அங்கு நடந்து செல்லலாம் அல்லது பேருந்தில் செல்லலாம். நடந்து செல்வதாக இருந்தால், பூங்கா இணைப்பு வழியாகத் தொடர்ந்து செல்லுங்கள். சுங்காய் சிம்பாங் கிரிக்கும் அடர்ந்த காட்டுப்பகுதிக்கும் நடுவில் கண்கவர் நடைபாதை உள்ளது. நீங்கள் கேன்பரா-செம்பவாங் பூங்கா இணைப்பை அடைந்தவுடன், வலதுபக்கம் திரும்பி கடைவீடுகளைக் காணலாம். பேருந்தில் செல்வதாக இருந்தால், செம்பவாங் சாலைக்குத் திரும்பிச்சென்று, ஆன்ட்ரூஸ் அவென்யூ அருகிலுள்ள பேருந்து நிறுத்தத்திற்குச் சென்று, அட்மிரால்டி சாலை ஈஸ்ட்டுக்குப் பிறகு பேருந்திலிருந்து இறங்குங்கள்.

1965 வாக்கில் கட்டப்பட்ட இந்தக் கடைவீடுகள், **செம்பவாங் ஸ்ட்ரிப்** எனப் பிரபலமாக அறியப்பட்டன. கடற்படைத் தளத்திலிருந்து கடலோடிகள் பலரும் நாடிச்சென்ற ஏராளமான கடைகளும் உணவகங்களும் இருந்த முன்னாள் செம்பவாங் வில்லேஜின் ஒரு பகுதியாக இவ்விடம் இடம்பெற்றிருந்தது. இந்தக் கடைவீடுகள் பாதையின் முடிவைக் குறிக்கின்றன. நீங்கள் இங்கு பானம் பருகி இளைப்பாறலாம் அல்லது ஏதாவது சாப்பிடலாம்.



## "டாக்யார்ட்" முதல் "ஷிப்யார்ட்" வரை

### பொதுப் போக்குவரத்துடன் 2.5 மணிநேரம் (5 கிலோமீட்டர்)

செம்பவாங்கின் வடக்குக் கரையில் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்த செம்பவாங் கடற்படைத் தளம் 1938ல் திறக்கப்பட்டு, 1971ல் மூடப்பட்டது. இந்தக் கடற்படைத் தளத்தில் "ஹெச்எம் டாக்யார்ட், சிங்கப்பூர்" எனும் கப்பல் பழுதுபார்ப்புப் பட்டறை அமைந்திருந்தது. அது 1968ல் சிங்கப்பூர் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு "செம்பவாங் ஷிப்யார்ட்" ஆனது. இந்தப் பாதை, முன்னாள் கடற்படைத் தளத்திலிருந்த பல்வேறு நினைவுச்சின்னங்களுக்கு உங்களை அழைத்துச் செல்லும்.



உங்கள் பயணத்தை **முன்னாள் அட்மிரால்டி ஹவுஸில்** தொடங்குங்கள். காலனித்துவ சிங்கப்பூரின் ஆக உயரிய கடற்படை அதிகாரியின் தங்குமிடமாக அது பயன்பட்டது. 1939-40 வாக்கில் நேவி ஹவுஸ் என்ற பெயரில் கட்டப்பட்ட இந்த மகத்தான கட்டடத்தில், எர்னஸ்ட் ஜான் ஸ்பூனரும் (ரியர் அட்மிரல், மலாயா), அவரது மனைவி மேகன் ஃபாஸ்டரும் 1941-42 ஆண்டுகளில் முதன்முதலில் தங்கியிருந்தனர். போருக்குப் பிறகு, கட்டடத்தின் பெயர் நெல்சன் ஹவுஸ் என மாற்றப்பட்டது. பின்னர், 1958 முதல் இக்கட்டடம் அட்மிரால்டி ஹவுஸ் என்றழைக்கப்படுகிறது. 1971 முதல் 1974 வரை, "ANZUK" ஹவுஸ் என்றும் இக்கட்டடம் அறியப்பட்டது. 2002 முதல் இக்கட்டடம் தேசிய நினைவுச்சின்னமாகப் பாதுகாக்கப்படுகிறது.

அடுத்து, கேன்பரா சாலை வழியாக **மஸ்ஜித் அஸ்யஃபா** வரை நடந்து செல்லுங்கள். 1930கள் முதல் 1970களின் துவக்கம் வரை, கடற்படைத் தளத்தின் ஆசியத் தொழிலாளர்களுக்கான தங்குமிடங்கள் கேன்பரா சாலையில்தான் இருந்தன. 1968ல், கடற்படைத் தளத்தின் முஸ்லிம் பணியாளர் ஒருவர் இப்பகுதியில் மஸ்ஜித் நேவல் பேஸ் என்ற பெயரில் சிறிய பள்ளிவாசல் ஒன்றை அமைத்தார். அது 2004ல் மூடப்பட்டது. அதற்குப் பதிலாக, அரபு பாணியிலான திரைகளும், இஸ்லாத்தின் சின்னங்களான பிறை நிலாவும் நட்சத்திரமும் வீற்றிருக்கும் எஃகு கோபுரமும் கொண்ட மஸ்ஜித் அஸ்யஃபா நவீன பள்ளிவாசல் அமைக்கப்பட்டது.



கேன்பரா சாலை வழியாகத் தொடர்ந்து சென்றால், இடதுபக்கத்தில் முன்னாள் உள்துறைக்குழு போர்க்காலப் படைவீரர் செம்பவாங் மனமகிழ் மன்றத்தைக் (2020ல் மூடப்பட்டது) காண்பீர்கள். இந்தக் கட்டடம், 1963ல் **ஏஜி வெஸ்டன்ஸ்** என்ற பெயரில் கட்டப்பட்டது. கடலோடிகளுக்கான விளையாட்டு, பொழுதுபோக்கு நிலையமாக இது பயன்பட்டது. பிரிட்டிஷார் 1971ல் சிங்கப்பூரிலிருந்து வெளியேறிய பிறகு, சிங்கப்பூரிலிருந்த நியூசிலாந்து படையினருக்கான மனமகிழ் மன்றமாக 1989 வரை ஃபர்ன்லீஃப் சென்டர் என்ற பெயரில் சேவை வழங்கியது.

அடுத்து, அட்மிரால்டி சாலை ஈஸ்ட்டின் குறுக்கே தாண்டிச் சென்றால், **செம்பவாங் கப்பல் பட்டறையின்** பிரதான நுழைவாயிலை அடைவீர்கள். இந்தக் கப்பல் பழுதுபார்ப்புப் பட்டறை 1938ல் திறக்கப்பட்டபோது, உலகின் ஆகப்பெரிய உலர்வகை கப்பல் பழுதுபார்ப்பு மேடை அங்கிருந்தது. அந்த 305 மீட்டர் நீள மேடை "கிங் ஜார்ஜ் VI ட்ரை டாக்" என்றழைக்கப்பட்டது. இன்று, இந்த நுழைவாயில் செம்ப்கார்ப் மரீன் அட்மிரால்டி பட்டறையின் (முன்னாள் செம்பவாங் கப்பல் பட்டறை) நுழைவழியாகப் பயன்படுகிறது. உள்ளே நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தாலும், முன்னாள் **செம்பவாங் தீயணைப்பு நிலையத்தின்** நீர்க்குழாய் கோபுரத்தை உங்களால் காணமுடியும். 1937-38 வாக்கில் கட்டப்பட்ட தீயணைப்பு நிலையம், 2007ல் பாதுகாக்கப்படும் கட்டடமாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து அட்மிரால்டி சாலை வழியாகச் செல்லுங்கள். வழியில், போருக்கு முந்திய காலத்தின் காலனித்துவ வீடுகள் பலவற்றைக் காண்பீர்கள். பிரிட்டிஷ் பணியாளர்களுக்காகக் **கடற்படைத் தளத்தில்** கட்டித் தரப்பட்ட **வீடுகள்** அவை. பெரிய கறுப்பு, வெள்ளை பங்களாக்களில் மூத்த அதிகாரிகளும், மற்ற பதவிகளை வகித்தவர்கள் சிறிய செங்கல் நிற வீடுகளிலும் வாழ்ந்தனர்.

அடுத்து, குயீன்ஸ் அவென்யூ-வுக்குள் திரும்புங்கள். அங்கு, பிரிட்டிஷ் கப்பல் பட்டறையின் மூத்த அதிகாரிகள் தங்கியிருந்த பற்பல கறுப்பு, வெள்ளை பங்களாக்களைக் காண்பீர்கள். இப்பகுதியில் உள்ள வீடுகள் இன்று தனியாருக்குச் சொந்தமானவை. நீங்கள் வீடுகளின் கட்டடக்கலையையும் வளாகத்தையும் பார்த்து ரசிக்கலாம். ஆனால், உள்ளே நுழையவோ, புகைப்படம் எடுக்கவோ கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.


குயீன்ஸ் அவென்யூ-விலிருந்து செயின்ட் ஹெலனா சாலைக்குள் நுழைந்து, பிறகு இடதுபக்கம் திரும்பினால் சைப்ரஸ் சாலையை அடைவீர்கள். இந்தச் சாலை சந்திப்பில், குயீன்ஸ் அவென்யூவிலிருந்த வீடுகளிலிருந்து மாறுபட்ட வடிவம் கொண்ட **கறுப்பு, வெள்ளை வீடுகளைக்** காண்பீர்கள். 1920களின் பிற்பகுதியில் இவ்வட்டாரத்தில் கட்டப்பட்ட முதல் கறுப்பு, வெள்ளை வீடுகள் இவை. கடற்படைத் தளத்தைக் கட்டிய பிரிட்டிஷ் பொறியாளர்களின் தங்குமிடமாக இவை பயன்பட்டன.

அடுத்து, **சைப்ரஸ் சாலைக்குள்** திரும்புங்கள். முன்னாள் கடற்படைத் தளத்தின் மற்ற பகுதிகளில் காணப்படும் பங்களாக்களுக்குப் பதிலாக, இந்தச் சாலையில் **குறைவான மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி வீடுகள்** உள்ளன. போருக்குப் பிறகு கடற்படைத் தளத்தில் பணிபுரிவோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததால் இந்த வீடுகள் கட்டப்பட்டன. மலாயா நெருக்கடிநிலை (1948-60), கொன்ஃபிரன்டாசி (1963-66) போன்ற பூசல்களில் கடற்படை பெரிதும் ஈடுபட்டிருந்ததால் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. எளிமையான, அதே சமயத்தில் நேர்த்தியான கலையெழில் (Art Deco) கட்டடக்கலை வடிவமைப்பைக் கொண்ட இந்தக் குடியிருப்பின் சன்னல்களில் "brise soleil" எனும் பிரெஞ்சு பாணி சூரியவொளி தடுப்புகளைக் காணலாம்.



சைப்ரஸ் சாலையின் முடிவில், இடதுபக்கம் திரும்பி **செம்பவாங் பூங்காவை** அடையலாம். இந்தக் கண்கவர் பசுமைப் பூங்கா, முன்பு கடற்படைத் தளத்தின் ஒரு பகுதியாக இருந்தது. பிறகு, 1979ல் செம்பவாங் பூங்காவாகத் திறக்கப்பட்டது. இந்தப் பூங்காவில் செம்பவாங் மரங்கள் பல நடப்பட்டுள்ளன. அந்த மரத்தின் பெயர்தான் இப்பகுதிக்கும் சூட்டப்பட்டது.

செம்பவாங் பூங்காவின் வட முனையில் **பியூலியூ ஹவுஸ்** அமைந்துள்ளது. 1910களில் கட்டப்பட்ட இந்தக் கட்டடம், 2005ல் பாதுகாக்கப்படும் கட்டடமாக அறிவிக்கப்பட்டது. இந்த வீடு ஆரம்பத்தில், யூதத் தொழிலதிபர் ஜோசப் புரூக் டேவிட் என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. பின்னர், 1923ல் கடற்படைத் தளத்திற்காக இவ்வீடு பற்றுமானம் செய்யப்பட்டு, மூத்த கடற்படை அதிகாரிகளின் இல்லமாகப் பயன்படுத்தப்பட்டது. வீட்டுக்கு முன்னால் இருக்கும் **பியூலியூ அணைகரை**, இரண்டாம் உலகப் போரின்போது கட்டப்பட்டது. போருக்குப் பிறகு, மூத்த கடற்படை அதிகாரிகள் அணைகரையில் நின்றுகொண்டு, புதிதாக வந்தடைந்த கப்பல்களுக்குத் தலைவணங்குவார்கள். இன்று, பலரும் மீன்பிடிக்கும் இடமாக பியூலியூ அணைகரை திகழ்கிறது. ஜோகூர் நீரிணையின் அற்புதமான காட்சியை வழங்கும் அணைகரை, இந்தப் பாதையின் கடைசி நிறுத்தமாக அமைவது பொருத்தத்தக்கது.




## HERITAGE SITES IN THE SUGGESTED SHORT TRAIL ROUTES



BEAULIEU HOUSE | FORMER ADMIRALTY HOUSE | HOLY TREE SRI BALASUBRAMANIAR TEMPLE | HOMES IN THE NAVAL BASE | HOUSES AT CYPRUS ROAD | HOUSES AT GIBRALTAR CRESCENT | MASJID ASSYAFAAH | MASJID PETEMPATAN MELAYU SEMBAWANG | SEMBAWANG HOT SPRING | SEMBAWANG SHIPYARD | SEMBAWANG STRIP

All information contained in this trail map is provided in good faith, and every reasonable effort has been made to ensure that the information is accurate and up to date at time of print. Accordingly, NHB makes no warranty or representation relating to the trail map and all information contained therein, and users relying on any of the information contained in the trail map shall do so at their own risk and diligence.

© 2021 National Heritage Board. All rights reserved.